பண்டிகை நாட்களையொட்டி

# மெட்ரோ ரெயில் சேவை நேரம் நீட்டிப்பு

சென்னை, அக்.23–

பண்டிகை நாட்கள் வருவதையொட்டி சென்னையில் மெட்ரோ ரெயில் சேவை இன்று (வெள்ளிக்கிழமை) மற்றும் நாளை (சனிக்கிழமை) இரவு 9 மணிக்கு பதிலாக இரவு 11 மணி வரை ரெயில்கள் இயக்கப்படுகிறது. அதேபோல் வருகிற 27–ந்தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 7 மணிக்கு பதிலாக அதிகாலை $5^{1}/_{2}$ மணியில் இருந்து இரவு 9 மணி வரை இயக்கப் படுகிறது.

அதேபோல் வருகிற 29–ந்தேதி (வியாழக்கிழமை) இரவு 11 மணி வரை ரெயில்கள் இயக்கப்படும். தொடர்ந்து வருகிற 2–ந்தேதி (திங்கட்கிழமை) காலை 7 மணிக்கு பதிலாக அதி காலை $5^{1}/_{2}$ மணியில் இருந்து இரவு 9 மணி வரை ரெயில்கள் இயக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.